பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களை தற்போது அனுபவித்து வரும் நபர்களிடமிருந்து திருக்கோயிலின் சுவாதீனத்தில் கொண்டு வர வழக்குகள் மூலமாகவும், நேர்முக நடவடிக்கை மூலமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்ணா மாவட்டம் நத்தம் தொகுதி திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக்கல்.

553—(*வினா எண் 13060) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் நத்தம் தொகுதியில் முருகன் ஸ்தலமான திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அண்ணா மாவட்டத்தில் உள்ள திருமலைக்கேணியை மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்ய 1986-87 ஆம் நிதியாண்டில் ரூபாய் இரண்டு லட்சம் ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக இரண்டு இலட்சம் ரூபாய் அனுமதிக் கப்பட்டிருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், ரோடு போடுவது, ஆண் களுக்கும், பெண்களுக்கும் குளிக்கும் அறை கட்ட, மற்ற அறை களைக் கட்ட இது போதுமானதாக இல்லை. இந்த இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலாக 10 இலட்சம் ரூபாய் முதற் கட்டமாக ஒதுக்கி வேலைகளைச் செய்துதர அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சுற்றுலா தலைவர் 14.90 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறார். ஒய்வ விடுதி கட்ட ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய், உணவு விடுதி கட்ட ஒரு இலட்சம் ரூபாய், உடை மற்றும் அறைகள்

1987 ஏப்ரல் 29]

கழிப்பறைகள் கட்ட ஒரு இலட்சத்து எண்பது ஆயிரம் ரூபாய், ரோடுகள் பூங்காக்கள் அமைக்க, கூடுதல் மின்வசதி ஏற்படுத்த என்று எல்லாவற்றுக்கும் சேர்த்து 14.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டை அனுப்பியிருக்கிறார். இந்த இரண்டு இலட்சம் ரூபாயை செலவு செய்துவிட்டு, மற்ற செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணிக்கு வருகிற பேருந்துகள் எல்லாம் அங்கே வர முடியாத நிலையில் பாதைகள் இருக்கின்றன. காரணம் அங்கேயுள்ள பாதைகள் நொடிகள் உள்ள பாதைகளாக காட்சியளிக்கின்றன. அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள ரோடுகளைப் பார்க்கும்போது குண்டும் குழியுமாக இருக்கின்றன. சில ரோடுகள் ஊராட்சிக்குச் சொந்தமான இடம் என்று சொல்லுகிறார்கள். ஒரு சிலவற்றை பஞ்சாயத்து ரோடு என்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்தில் பணம் இல்லாததால், அந்த நொடிகளைப் போட பணம் இல்லாத காரணத்தால் அவற்றை ஹைவேஸ் ரோடுகளாக மாற்றி, அந்த ரோடை விரிவு படுத்த கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு, அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருத்தலம் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது. பழனிக்கு அடுத்தாற் போல் பக்தர்கள் அங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள். அது வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லில் இருக்கும் இன்னொரு அதிகாரி பகுதி நேர அதிகாரியாக இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே திருமலைக்கேணிக்கு என்று தனி நிர்வாக அதிகாரி போட்டால் கோவில் வளர்ச்சியைப் பெருக்க வசதியாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் திருமலைக்கேணியின் வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு தனி நிர்வாக அதிகாரியை நியமிப்பார்களா?

[1987 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நிர்வாக அதிகாரி போடு வதற்குத் தகுதியிருந்தால், தனி நிர்வாக அதிகாரி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கான லுக்குச் செல்லக்கூடியவர்கள் கொடைரோடில் இறங்கிப் போகும் போது மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று அங்கே சுற்றுலா மையம் ஆரம்பிக்க சாங்ஷன் செய்யப்பட்டது. இந்த ஆண்டே அந்த வேலை ஆரம்பிக்கப்படுமா? பழனி பெரிய யாத்திரிகர்கள் ஸ்தலமாக இருக்கிறது. அங்கே வரக்கூடியவர்கள் தங்க இடமில்லாமல் இருக்கிறது. எனவே அங்கேயும் ஒரு சுற்றுலா மையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத் துள்ளார்கள். அதுவும் இந்த ஆண்டே நிறைவேற்றிக் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. நாளைக்கு இதுபற்றிய மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அப்போது நிச்சயம் பதில் தருகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருக்கோயில் போன்று தமிழகத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த திருக்கோவில்களை எல்லாம் திரைப் படங்களாக, விளம்பரப் படங்களாக எடுத்து, நாட்டு மக்களுக்கு திருக்கோவில்களின் சிறப்புகளைத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்ட வாரியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திருத்தலங்கள் மற்றும் பயணிகள் வருகின்ற முக்கிய இடங்கள் ஆகியவற்றை கேசட் மூலம் படமெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருத்தலத்திலே மிக அற்புதமான நீரோட்டம் எப்போதும் வற்றாத அளவுக்கு வந்துகொண்டிருக் கிறது. மக்கள் அனைவரும் 'சின்ன பழனி' என்று அழைக்கும்

1987 ஏப்ரல் 29]

அளவுக்கு அங்கே யாத்திரிகர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே மக்கள் தங்குவதற்கு சிறிய இடம்கூட இல்லாமல் இருக்கிறது. மலைக்குச் செல்லும் சாலை வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, மக்கள் தங்குவதற்கு வசதி செய்யவும், சாலையை உடனடியாகப் போடவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ஒதுக்கிய ரூ. 2 இலட்சத்தோடு அந்த மாவட்டத்திலுள்ள போக்குவரத்துத்துறை ரூ. 3 இலட்சம் கொடுப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே சொல்லப்பட்ட ரூ. 14.90 இலட்சம் மதிப்பீட்டில் ஓய்வு விடுதி, உணவு விடுதி, உடை மாற்றும் அறைகள் கட்டப்படும். சாலை மேம்பாட்டுக்கு ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது பணிகள் துவக்கப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் வசதிகள் எல்லாம் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்க உரிமை அளிக்கும் சட்டம்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைக்கு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது சட்டசபையில் விவாதம் நடைபெற்ற நேரத்தில், அந்த இலாக்கா சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உங்களது அனுமதியோடு அதைப் படிக்க விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் தவறு செய்தால், அவர்களை

. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை இல்லாமல் சொல்லுங்கள்.